**செய்தி வெளியீடு எண்.553** **நாள் 28–12–2006**

## செய்தி வெளியீடு

## தமிழக அரசின் ’சி’ மற்றும் ‘டி’ பிரிவு ஊழியர்களுக்கு 30 நாட்கள் ஊதியம் போனஸ்
## ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவு அலுவலர்களுக்குச் சிறப்பு போனஸ் ரூ.825/– ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.150/– பொங்கல் பரிசு

தமிழக அரசின் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சித்துறை பணியாளர்கள் ஆகியோருக்கு 2001ஆம் ஆண்டு பொங்கலையொட்டி, போனசாக 2500 ரூபாயும், சிறப்பு போனசாக 825 ரூபாயும் தி.மு. கழக ஆட்சியில் இறுதியாக வழங்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர் வந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட இந்தச் சலுகையினை தற்போது மீண்டும் வழங்குவது என இந்த அரசு முடிவெடுத்து, 2006–07 நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை தொடர்ந்து 2005–2006 ஆம் ஆண்டிற்கு, ’சி’ மற்றும் ‘டி’ பிரிவு ஊழியர்கள் அனைவருக்கும் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையாக போனஸ் வழங்கிடவும், ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவு அலுவலர்களுக்குச் சிறப்பு போனஸாக ரூ.825/– வழங்கிடவும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பொங்கல் பரிசாக ரூ.150/– வழங்கிடவும் முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளார். இந்த ஆட்சியில் மீண்டும் பணி அமர்த்தப்பட்ட சாலைப்பணியாளர்களுக்கு போனஸ் வழங்க விதி மற்றும்; முறைப்படி; தகுதி அளவில், இந்த ஆண்டு இயலாது எனினும் – பொங்கல் பரிசாக முதலமைச்சர் தரும் பரிவுத் தொகையாக தலா ரூபாய் 825 வழங்க முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளார்.

’சி’ மற்றும் ‘டி’ பிரிவு ஊழியர்கள் அனைவருக்கும் மாதச் சம்பளம் 2500 ரூபாய் என்ற அளவிலேயே கணக்கிடப்பட்டு போனஸ் வழங்கப்படும்.

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் இந்த போனஸ் வழங்கப்படும்.

சில்லறை செலவினத்தின்அடிப்படையில் பணியாற்றும் முழுநேர மற்றும் பகுதிநேர பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் சத்துணவுப்பணியாளர்கள், கிராம உதவியாளர்கள், 2003ம் ஆண்டு ஒப்பந்த

**அடிப்படையிலான தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட உதவியாளர்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஒரு நிதியாண்டில் குறைந்த பட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்பு போனஸ் வழங்கப்படும்.**

**இந்த ஆணையின் மூலம் அரசுக்கு இந்த ஆண்டில் சுமார் ரூ.250 கோடி செலவாகும். இதனால் சுமார் 12.43 இலட்சம் அரசு அலுவலர்களும், 5.10 இலட்சம் ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களும் பயனடைவார்கள்.**

.....................................................................

**வெ**ளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9